**OS.No.99/2015 P.W.2-கிருஷ்ணமூர்த்தி 10.07.2026**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு அழைப்பானை எதுவும் கிடைத்ததா என்றால் கிடைக்கவில்லை. வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். கடனுறுதி சீட்டில் நான் 2வது சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். அந்த பாண்டு கையால் எழுதப்பட்டதா அல்லது டைப் செய்யப்பட்டதா என்றால் கையால் எழுதப்பட்டது. அதில் எழுதப்பட்டுள்ள தொகை கடனுறுதி சீட்டு எழுதிய நாளில் கொடுக்கப்பட்டதா அல்லது அதற்கு முந்தைய நாளில் கொடுக்கப்பட்டதா என்றால் எழுதிய நாளில் கொடுக்கப்பட்டது. அதில் சொல்லப்பட்டுள்ள தொகை பணமாக கொடுக்கப்பட்டது. பணம் எந்தெந்த ரூபாயாக கொடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் பணத்தை கொடுத்த போது பார்க்கவில்லை என்றால் சரியல்ல, பார்த்தேன்.

2. கடனுறுதி சீட்டில் பிரதிவாதி எத்தனை கையொப்பம் போட்டார் என்றால் ஸ்டாம்பு ஒட்டப்பட்டு அதில் கையொப்பம் இட்டார். எத்தனை கையொப்பம் என்று சரியாக ஞாபகமில்லை. பிரதிவாதி கையொப்பம் இட்ட பிறகு நான் கையொப்பம் இட்டேனா என்றால் பிரதிவாதி கையொப்பம் போட்ட பிறகு நான் கையொப்பம் போட்டேன். கடனுறுதி சீட்டில் எத்தனை தாள்கள் இருந்தது என்றால் ஞாபகமில்லை. நான் எல்லா உண்மைகளையும் தெரிந்து கொண்டு பிரதிவாதிகளுக்கு எதிராக சாட்சியம் சொல்ல வேண்டுமென்பதால் கேள்விகளுக்கு ஞாபகமில்லை என்று பதில் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் சொன்னதுபோல எந்த வழக்கு விவரங்களும் எனக்கு நேரடியாக தெரியாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி எனக்கு மாமா முறையாகும். மாமாவிற்காக இந்த வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை